பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 10 2024 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு சற்றுமுன்னர் தொடங்கியது.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மகாராஷ்ட்ராவில் 32 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான் முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

3. இலங்கை சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திசநாயகே, பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரியா உள்ளிட்டோரை சந்தித்து பேசினார்.

4. குரங்கம்மை நோயை கண்டறியும் முதலாவது பரிசோதனைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று ஜாம்ஷெட்பூர் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியையும், மோஹன் பகான் அணி – முகமதியன் ஸ்போட்ஸ் கிளப் அணியையும் எதிர்கொள்கின்றன.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<<<>>>>>>>

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கியது.

மொத்தம் உள்ள 90 சட்டப்பேரவைத்தொகுதிகளில் காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை ஆறு மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில், இரண்டு கோடிக்கும் மேற்பட்டோர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 20 ஆயிரத்து 629 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

101 பெண்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

ஆளும் பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி, இந்திய தேசிய லோக்தளம் ஆகிய கட்சிகள் இடையே நான்கு முனைப்போட்டி நிலவுகிறது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 8-ஆம்தேதி எண்ணப்படும்.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளும் அன்றைய தினம் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

<<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மகாராஷ்ட்ரா மாநிலம் தானேயில் 32 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

ஒருநாள் பயணமாக மும்பை செல்லும் பிரதமர், இன்று **Washim**-ல்

23 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் மற்றும் கால்நடை பராமரிப்பு துறைக்கான திட்டங்களையும் தொடங்கிவைக்கிறார்.

பஞ்ஜாரா சமூகத்தின் வளமான பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் பஞ்ஜாரா வீரசாட் அருங்காட்சியகத்தை அவர் திறந்துவைக்கிறார்.

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ், 18-ஆவது தவணையை இன்று பிரதமர் விடுவிக்கிறார்.

இதனால் நாடு முழுவதும் ஒன்பது கோடியே 40 லட்சம் விவசாயிகள் பயனடைய உள்ளனர்.

வேளாண் கட்டமைப்பு நிதியிலிருந்து 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ள புதிய திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

இத்திட்டத்தின்கீழ், வேளாண் விளைபொருள் பதனிடும் நிறுவனங்கள், கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்படும்.

இதேநிகழ்ச்சியில், 9 ஆயிரத்து 200 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளையும் தொடங்கிவைக்கிறார்.

தானேயில் புதிய மெட்ரோ மற்றும் சாலைத்திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்க உள்ளார்.

இந்நகரில் 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ள தானே ஒருங்கிணைந்த மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டவுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

இலங்கை சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திசநாயகே, பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரியா உள்ளிட்டோரை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்ததாக சமூக வலைதளபதிவில் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு விஜிதா ஹெறத், முன்னாள் அதிபர் திரு ரனில் விக்ரமசிங்கே, ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் திரு சஜித் பிரேமதாசா ஆகியோரையும் திரு ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

<<<<<<<<>>>>>>>

படைப்பாற்றல் துறையில் ஆக்கப்பூர்வமான உள்ளடக்கத்தை உருவாக்குவதில் இந்தியா உலகளாவிய மையமாக மாறுவதற்கான நேரம் கணிந்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு **Sanjay Jaju** தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் அனிமேஷன் மற்றும் பொழுதுபோக்கு துறையின் பிரதிநிதிகள் இடையே நேற்று உரையாற்றிய அவர், உலகளாவிய ஊடக பொழுதுபோக்கு துறையில் இந்தியாவின் பங்கு வெறும் இரண்டு சதவீதம் மட்டுமே என்று கூறினார்.

தற்போதைய 25 பில்லியன் டாலர் சந்தையிலிருந்து 2029-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் சந்தையாக வளர்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு இத்தொழில் துறையினருக்கு தேவையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவை உலக அளவில் உள்ளடக்க மையமாகவும், உள்ளடக்கங்களின் ஏற்றுமதியாளராகவும் மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு அத்துறையினரை திரு **Sanjay Jaju** கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>>>>

மேற்குவங்கத்தில் இளநிலை மருத்துவர்கள் நடத்தி வந்த வேலைநிறுத்தத்தை முடித்துக்கொண்டுள்ளனர்.

அதேநேரத்தில் தங்களது கோரிக்கைகளை மாநில அரசு ஏற்றுக்கொள்ளாவிடில், உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அவர்கள் கெடு விதித்துள்ளனர்.

முன்னதாக, நேற்று கொல்கத்தாவில் மருத்துவர்கள் பேரணி நடத்தியபோது, அவர்களை காவல்துறையினர் தாக்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேநேரத்தில் தங்களது செயலுக்கு காவல்துறையினர் மன்னிப்பு கேட்டதாகவும் இளநிலை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவ மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பத்து அம்ச கோரிக்கையை மருத்துவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

<<<<<<<<>>>>>>>

அர்ஜென்டினா வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி **Diana Mondino** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

புதுதில்லியில ஏழாவது இந்திய – அர்ஜென்டினா கூட்டு ஆணையத்தின் கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து பேச உள்ள அவர், இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்தியா – அர்ஜென்டினா இடையிலான உக்திசார் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாகவும் அவர் விவாதிக்க உள்ளார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி உள்ளிட்ட பல்வேறு அமைச்சர்களையும், அர்ஜென்டினா வெளியுவுத்துறை அமைச்சர் சந்தித்து பேச திட்டமிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

மருத்துவம், விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விளையாட்டுப் போட்டிகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்படும் மாநிலம் தமிழகம் என்று கூறினார்.

இந்தியாவில் விளையாட்டுத்துறையின் தலைநகராக தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான செஸ் ஒலிம்பியாட், உலகக்கோப்பை ஸ்குவாஷ், ஆசிய கோப்பை ஹாக்கி உட்பட பல்வேறு போட்டிகளை தமிழகம் வெற்றிகரமாக நடத்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் விளையாட்டு உபகரங்களை மாநில அரசு வழங்கியுள்ளதாகவும், கிராமப்புறத்திலிருந்து விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க மாநில அரசு தேவையான உதவிகளை செய்து வருவதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

வனவிலங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், வன விலங்குகள் பாதுகாப்பை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதிமுதல், எட்டாம் தேதிவரை வன உயிரின வார விழா கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<<<>>>>>>>

குரங்கம்மை நோயை கண்டறியும் முதலாவது பரிசோதனைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த அங்கீகாரமானது குரங்கம்மை அதிகமாக உள்ள நாடுகளில் அந்த நோயை விரைந்து கண்டறியும் திறனை கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் விரைவான மற்றும் துல்லியமான சோதனைக்கான தேவையையும் இது ஈடுசெய்யும்.

இதுவரை ஆப்பிரிக்காவில் 800-க்கு மேற்பட்டோர் குரங்கம்மை நோயால் இறந்துள்ளனர்.

30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்பிரிக்க ஒன்றியத்தில் 16 நாடுகளில் இந்நோய் கண்டறியப்பட்டுள்ளது.

அதில், காங்கோவில் மிக கடுமையான பாதிப்பு காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவுவதன் மூலம், குரங்கம்மை வைரஸ் காய்ச்சல் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, தோல் புண்கள், மூட்டுகளில் வலி ஆகியவை இந்நோயின் அறிகுறிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் குப்வாரா மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்திய எல்லையையொட்டிய பகுதியில் பாகிஸ்தானிலிருந்து ஊடுருவல் நிகழக்கூடும் என்று உளவுத்துறை தகவலையடுத்து, அந்த பகுதிக்கு பாதுகாப்புப்படையினர் விரைந்து சென்றபோது, மறைவிடங்களிலிருந்து தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

இதையடுத்து, பாதுகாப்புப்படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று ஜாம்ஷெட்பூர் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை ஐந்து மணிக்கு தொடங்குகிறது.

இரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில, மோஹன் பகான் அணி — முகமதியன் ஸ்போட்ஸ் கிளப் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<<>>>>>>>

துபாயில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான மகளிர் டுவெண்டி —டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 58 ரன் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

<<<<<<<<END>>>>>>>